# குப்பை கூளங்களை திறந்த வெளியில் எரித்தல் தடை

2034/36 ஆம் இலக்க 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 1ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம்

எந்தவொரு தனிநபரும் குப்பை கூளங்களையும் பிளாஸ்ரிக் உள்ளடங்கலாக வேறு எரியக்கூடிய பொருட்களை திறந்த வெளியில் எரிக்கவோ அல்லது எரிக்கச் செய்தலோ அல்லது திறந்த வெளியில் எரித்தலை அனுமதித்தலோ அல்லது எரிக்க விடுதலோ கூடாது.( No person shall burn openly or cause to, allow or permit the open burning of refuse or other combustible matters inclusive of plastics).

மேலுள்ள ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகத்தவறும் எவரேனும் ஆள் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் சட்டத்தின் பிரிவு 31 இன் கீழ் தவறொன்றிற்கு ஆளாதலும் தண்டிக்கப்படற்பாலாதலும் வேண்டும்.(Any person who fails to comply with the regulations above shall be liable to an offence and punishable under Section 31 of the National Environmental Act, No. 47 of 1980).

மேற்குறிப்பிடப்பட்ட வர்த்தகமானி அறிவித்தல்களை மீறுவோருக்கு எதிராக தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதை தங்களுக்கு அறியத்தருவதுடன் இவ் வர்த்தமானி அறிவித்தல் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.